# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 26 | 4 Pages | 27.08.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 26 | 4 பக்கங்கள் | 27.08.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## லேண்டர் தரையிறங்கிய இடம் சிவசக்தி என அழைக்கப்படும்: விஞ்ஞானிகளிடையே பிரதமர் மோடி பேச்சு




கர்நாடகா, ஆக. 27

பிரதமர்மோடி விஞ்ஞானிகளை பாராட்டுவதற்காக இன்று காலை இஸ்ரோ சென்றிருந்தார். இஸ்ரோ மையம் சென்ற அவரை, இஸ்ரோதலைவர் சோம்நாத் மற்றும் விஞ்ஞானிகள் வரவேற்றனர். சந்திரயான் 3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல், சந்திரயான் 3 மாதிரியை நினைவுப் பரிசாகவழங்கினார். பின்னர், இஸ்ரோதலைவர்படம்பிடிக்கப்பட்டநிலவின் போட்டோக்களை வழங்கினார். பின்னர் சந்திரயான் 3 விண்கலம் நிலவில் கால் பதித்தது குறித்து, இஸ்ரோ தலைவர் சோம்நாத் விளக்கமாக பிரதமர் மோடிக்கு எடுத்துக் கூறினார். அதன்பின் பிரதமர் மோடி விஞ்ஞானிகளுக்கு மத்தியில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: 1. உங்களுக்கு மத்தியில் இருப்பது, எனக்கு தனிப்பட்ட மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது பல பிறவிகள் காத்திருந்து கிடைத்த மகிழ்ச்சி போன்று உள்ளது. உடல், மனம் என அனைத்தும் மகிழ்ச்சியால் பூரித்து கொண்டுள்ளது. 2. சில நேரங்களில் மனிதர்கள்அதிக அளவில் உணர்ச்சிவசப்படுவார்கள். அதேபோன்ற உணர்ச்சி தற்போது எனக்கு ஏற்பட்டது. 3. நான் தென்ஆப்பிரிக்காவில் இருந்த போதிலும், மனம் முழுவதும் உங்களுடனேயே இருந்தது. 4. நான் உங்களுக்கு அநியாயம்செய்துவிட்டேன்போன்றஎண்ணம்ஏற்படும். அதிகாலையிலேயே உங்கள் அனைவரையும் அழைத்து தொந்தரவு செய்து விட்டேன். 5. சந்திராயனுக்காக எவ்வளவு நேரம் வேலை செய்து இருப்பீர்கள். உங்களுக்கு துன்பம் ஏற்பட்டிருக்கும். 6. இந்தியா வந்ததுமே எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக உங்களை பார்க்க வேண்டும் தரிசனம் செய்ய வேண்டும் என நினைத்தேன். 7. சல்யூட் அடிக்க நினைத்தேன். உங்களுடைய உழைப்பிற்காக, தைரியத்திற்காக, இலக்கை அடைய வேண்டும் நோக்கத்திற்கான, திடமானசிந்தனைக்கானசல்யூட். 8. இது ஒருசாதாரணமான வெற்றியே அல்ல. இந்த அளவில்லா விண்வெளியில் இந்திய விஞ்ஞானிகளுக்கான சங்கநாதம் இது. 9. இந்தியா நிலவில கால் வைத்திருக்கிறது. நம்முடைய நாட்டின் கவுரவத்தை நிலவில் நிலைநாட்டியிருக்கிறோம். 10. இதுவரை யாரும் செய்யாத வேலையை செய்திருக்கிறோம். இதுதான் இன்றைய இந்தியா. உணர்ச்சி மிகுந்த பாரதம். விழிப்பு மிகுந்த பாரதம். புதிய வழியில் சிந்திக்கும் பாரதம். 11. லேண்டர் தரையிறங்கிய இடம் சிவசக்தி என அழைக்கப்படும்.

## கட்சியில் பிளவு இல்லை...! எம்.எல்.ஏ.க்கள் ஒட்டுமொத்த கட்சி என்று அர்த்தம் கிடையாது சரத் பவார்




மகாராஷ்டிரா, ஆக. 27

மகாராஷ்டிரா மாநிலத்தில் சரத் பவார் உருவாக்கிய தேசியவாத காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது. அவரது அண்ணன் மகன் அஜித் பவார், சில ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் உடன் தனியாக செயல்பட்டு வருகிறார். நாங்கள்தான் தேசியவாத காங்கிரஸ் என அவர்கள் தெரிவித்து வருகிறார்கள். இதுகுறித்து இந்திய தேர்தல் ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அரசியலில் எப்படி காய் நகர்த்த வேண்டும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கும் சரத் பவாரே, தனது கட்சியை தக்கவைத்துக் கொள்வதில திண்டாடி வருகிறார். பொதுவாக ஒரு கட்சி பிளவுப்படும்போது எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம்.பி.க்கள் அதிகமாக யார் பக்கம் இருக்கிறார்களோ? அவர்கள் கைதான் ஓங்கியிருக்கும். ஆனால், சரத் பவார் எம்.எல்.ஏ.க்கள் ஒட்டுமொத்த கட்சிகள் என்று அர்த்தம் கிடையாது எனத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் கூறுகையில் ''தேசியவாத காங்கிரஸ் கட்சியில் பிளவு இல்லை. சில எம்.எல்.ஏ.க்கள் விலகியுள்ளனர் என்பது உண்மைதான். ஆனால், எம்.எல்.ஏ.க்கள் அரசியல் கட்சி என்று அர்த்தம் கிடையாது. அவர்களுடைய பெயர்கள் கூறி, பிரிந்து சென்றவர்களுக்கு ஏன் முக்கியத்தும் கொடுக்க வேண்டும். நேற்று சரத் பவாரின் மகளும், தேசியவாத காங்கிரஸ் கட்சியில் செயல் தலைவருமான சுப்ரியா சுலே, ''தேசியவாத காங்கிரஸ் கட்சியில் பிளவு இல்லை. அஜித் பவார் அதன் தலைவராக தொடர்கிறார்'' என்றார். இதற்கு முதலில் பதில் அளித்த சரத் பவார், ''இந்த விசயத்தில் எந்த சர்ச்சையும் இல்லை'' எனக் கூறியிருந்தார். பின்னர், இதுகுறித்து எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்தார். கடந்த ஜூலை 2ந்தேதி தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து அஜித் பவார் உள்ளிட்ட 9 சட்டசபை உறுப்பினர்கள், ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான மகாராஷ்டிரா மந்திரிசபையில் இணைந்தனர்.

## 48 மணி நேரம்.. நாட்டை விட்டு வெளியேறுங்கள்.. 4 நாட்டு தூதர்களுக்கு நைஜர் எச்சரிக்கை




நைஜர், ஆக. 27

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு நைஜர். இதன் தலைநகர் நியாமே. இங்கு அதிபராக இருந்த மொகமெட் பசோம் ஜன்தா எனப்படும் ராணுவ குழு நடத்திய சிறு கிளர்ச்சியால் கடந்த ஜூலை 26 அன்று பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். இவருக்கு பதிலாக கிளர்ச்சியாளர்கள் அமைப்பின் தலைவர் அப்துரஹ்மானே சியானி தன்னைத் தானே புது அதிபராக அறிவித்து கொண்டு ஆட்சியில் அமர்ந்தார். முன்னாள் அதிபரும் அவர் குடும்பத்தினரும் சிறை வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. நாட்டின் எல்லைகள் மூடப்பட்டன. அந்நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஜன்தா அமைப்பு 21 பேர்களை கொண்ட ஒரு புதிய அமைச்சரவையையும் அறிவித்துள்ளது. இந்நிலையில் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பான எகோவாஸ் இந்த ஆட்சி மாற்றத்தை அங்கீகரிக்கவில்லை. மீண்டும் பசோம் பதவியில் அமர்த்தப்பட வேண்டுமென்று ஜன்தா அமைப்பிற்கு எகோவாஸ் எச்சரிக்கை விடுத்தது. ஆனால், இதற்கு ஜன்தா பணியவில்லை. நைஜரில் அமைதியான முறையில் ஜனநாயக ஆட்சியை மீண்டும் கொண்டு வர அமெரிக்கா உட்பட பல நாடுகள் முயற்சித்தன. ஆனால் அவையும் தோல்வியில் முடிந்தது. ஆகஸ்ட் 18 அன்று, "முடிவில்லாத பேச்சுவார்த்தையை ஜன்தா அமைப்புடன் நடத்த முடியாது. தேதி அறிவிக்காமல் ஒரு முக்கிய நாளில் ராணுவ ரீதியாக நைஜரில் ஜனநாயகத்தை மலரச் செய்வோம்" என எகோவாஸ் அமைப்பு அறிவித்தது. இந்த எச்சரிக்கையையும் ஜன்தா அலட்சியப்படுத்தியது. இந்நிலையில் தற்போதைய நைஜர் அரசு, பிரான்ஸ், ஜெர்மனி, நைஜீரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்த தூதர்கள், நைஜர் நாட்டை விட்டு 48 மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என அறிவித்துள்ளது. "நைஜர் ஜன்தாவை ஆட்சியாளர்களாகவே நாங்கள் அங்கீகரிக்கவில்லை" என பிரான்ஸ் நாடு உடனடியாக பதிலளித்தது. தொடர்ந்து நடக்கும் ரஷிய உக்ரைன் போரினால் சரிந்து வரும் உலக பொருளாதாரம், மற்றொரு போர் நைஜரில் ஏற்பட்டால் மேலும் பாதிப்படையலாம் என அரசியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

# சாலை விபத்தில் உயிரிழந்த போலீஸ் ஏட்டு குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் உதவி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஆக. 27

ரோந்துப் பணியின்போது ஏற்பட்ட விபத்தில் தலைமைக் காவலர் ஸ்ரீதர் உயிரிழந்திருப்பது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும். தலைமைக் காவலர் ஸ்ரீதரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது: திருச்சி மாநகர், அரியமங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்த ஸ்ரீதர் (வயது 45) கடந்த 3072023 அன்று அரிஸ்டோ ரெயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகில உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் தலைமைக் காவலர் ஸ்ரீதர் உயிரிழந்திருப்பது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும். தலைமைக் காவலர் ஸ்ரீதரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு 25 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# டெல்டா மாவட்டங்களில் உதயநிதி ஸ்டாலின் சூறாவளி சுற்றுப்பயணம் செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்பு

சென்னை, ஆக. 27

தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களில் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இன்று மாலை 5 மணிக்கு நாகப்பட்டினம் அவுரித் திடலில் நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டமும், இரவு 7 மணிக்கு மயிலாடுதுறை சீனிவாசபுரத்தில் மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டமும் நடக்கிறது. இந்த கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார்.

இன்று (ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணிக்கு பட்டுக் கோட்டையில் பழஞ்சூர் செல்வம் இல்ல திருமண விழாவிலும், 11 மணிக்கு பரமேஸ்வரன் இல்ல திருமண விழாவிலும் 12 மணிக்கு மாவட்ட துணை செயலாளர் ரமேஷ் இல்ல புதுமனைபுகுவிழாநிகழ்ச்சியிலும் அமைச்சர் உதயநிதி பங்கேற்கிறார்.

பின்னர் மீண்டும் 12.30 மணி அளவில் பட்டுக் கோட்டை கோமதி விலாசில் தஞ்சை தெற்கு மாவட்ட முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார். மாலை 5 மணிக்கு புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திலும், இரவு 7 மணிக்கு திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடக்கும் திருச்சி வடக்கு, தெற்கு, மத்திய மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திலும் உதயநிதி பங்கேற்று பேசுகிறார்.

நாளைமறுநாள்(திங்கட்கிழமை) காலை 11 மணி அளவில் அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் பல்வேறு துறைகளின், மாலை 4 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலவலக ஆய்வு கூட்டத்திலும் பங்கேற்கும் உதயநிதி அன்று இரவு அரியலூர், பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.

வருகிற 29ந் தேதி (செவ்வாய்கிழமை) காலை 10.30 மணிக்கு விருத்தாச்சலம் கழுதூரில் நடைபெறும் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் உதயநிதி கலந்து கொள்கிறார். இதில் கடலூர் கிழக்கு, மேற்கு மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். அன்று மாலை 4 மணி அளவில் கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவல கத்தில் நடைபெறும் பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வு கூட்டத்திலும் உதயநிதி கலந்து கொள்கிறார்.

முன்னதாக இன்று காலையில் நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மண்டல ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி கலந்து கொண்டார்.

தஞ்சை மற்றும் திருவாரூரில் நடந்த தி.மு.க. இளைஞர் அணிசெயல் வீரர்கள் கூட்டத்திலும் கலந்து கொண்டு கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசினார்.

# திருப்பூர் கோல்டன் நகரில் குண்டும்குழியுமாக கிடக்கும் சாலையால் பொதுமக்கள் அவதி

பெருமாநல்லூர், ஆக. 27

திருப்பூர் கோல்டன் நகரில் குண்டும்குழியுமாக கிடக்கும் சாலையால் பொதுமக்கள் அவதி 26 ஆகஸ்ட் 2023 4:21 PM பொதுமக்களின் கேள்விக்கு முன்னுக்கு பின் முரணாக பதில் கூறி அலட்சியம் செய்து மவுனம் காத்து வருகிறார்கள். சாக்கடை குழாய் பதிப்பு பணிகளுக்காக குழிகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் உள்ளது.





திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 2ம் மண்டலத்திற்கு உட்பட்ட ஊத்துக்குளி ரோடு கோல்டன் நகர் 32 வது வார்டில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக குழாய் பதிப்பு மற்றும் சாக்கடை குழாய் பதிப்பு பணிகளுக்காக குழிகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் உள்ளது. இந்நிலையில் ரோடுபோடுவதற்காகபெரியஜல்லி கற்களை கோல்டன் நகர் அருண் மெடிக்கல் முதல் சஞ்சய் நகர் பள்ளி வாசல் வரை கொட்டி அதை சரிவர ரோடு ரோலரைக் கொண்டு சமன் செய்யாமல் ஆங்காங்கே குண்டும் குழியுமாக அரைகுறையாக விட்டுச் சென்றுள்ளனர். இதனால் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் சிறுவர்கள் முதல் பெரியவர் வரை அனைவரும் இந்தப் சாலையில் விழுந்து விடுவோமோ என்ற பயத்துடனேயே பயணிக்கின்றனர். இது சம்பந்தமாக பொதுமக்கள்மாநகராட்சிநிர்வாகம் மற்றும் வார்டு கவுன்சிலர் ஆகியோரை அணுகி, இத்தனை வேலை நிலுவையில் இருக்கும் போது எதற்காக ஜல்லி கற்களை கொட்டினீர்கள் என்று முறையிட்டுள்ளனர். பொதுமக்களின் கேள்விக்கு முன்னுக்கு பின் முரணாக பதில் கூறி அலட்சியம் செய்து மவுனம் காத்து வருகிறார்கள். ஆகையால் மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு குண்டும் குழியுமாக இருக்கும் இச்சாலையை சீரமைத்து தர வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தவறும் பட்சத்தில் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்து சில கட்சிகளின் ஆதரவோடு போராட முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது. ஆகவே மாநகராட்சி நிர்வாகம் கவனத்தில்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோல்டன்நகர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அவினாசியில் வியாபாரிகள் சங்க கூட்டம்

அவினாசி, ஆக. 27

கூட்டத்திற்கு அவினாசி வட்டார வியாபாரிகள் சங்கத் தலைவர் முத்துக்குமரன் தலைமை தாங்கினார். போக்குவரத்து இடையூறு மற்றும் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகமாகி வருகின்றது.



அவினாசிஅனைத்துவியாபாரிகள் சங்க செயற்குழு கூட்டம் அங்குள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அவினாசி வட்டார வியாபாரிகள் சங்கத் தலைவர் முத்துக்குமரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் லாலா கணேசன் முன்னிலை வகித்தார். இதில் வியாபாரிகள் சங்க மாவட்ட துணை தலைவர் முத்தாரம்மன் தனசேகர், பகுதி செயலாளர் முத்துலிங்கம் உள்ளிட்ட திரளான வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன: அவினாசியில் பிரதான சாலையின் இருபுறமும் உள்ள திடீர் கடைகளால் போக்குவரத்து இடையூறு மற்றும் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகமாகி வருகின்றது. ஆகவே ரோட்டை ஆக்கிரமித்துவியாபாரம்செய்வதை தடுக்கும் பொருட்டும், அவர்கள் வியாபாரம் செய்ய தனி இடம் ஒதுக்க வேண்டும். இப்பிரச்சனைகள் குறித்து அரசுத்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை மனு கொடுப்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மதுரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரெயில் பெட்டியில் தீ விபத்து: பலி எண்ணிக்கை 9 ஆக உயர்வு

மதுரை, ஆக. 27

இந்திய ரெயில்வே மூலம் நாடு முழுவதும் உள்ள ஆன்மிக ஸ்தலங்களுக்கு சுற்றுலா ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. அதன்படி புண்ணிய ஸ்தலமான ராமேசுவரத்துக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்து சுற்றுலா ரெயில்கள் இயக்கட்டு வருகிறது. அதன்படி உத்தர பிரதேசம் மாநிலம் லக்னோவில் இருந்து தமிழகத்தில் உள்ள ராமேசுவரம், கன்னியாகுமரி, மதுரை உள்ளிட்ட ஆன்மிக ஸ்தலங்களுக்கு சுற்றுலா ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் இருந்து கடந்த 17ந்தேதி புறப்பட்ட சுற்றுலா ரெயிலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 60க்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டனர். வட மாநிலத்தவர்கள் ரெயிலில் பயணம் மேற்கொள்ளும்போது விதிகளை மீறி ரெயில் பெட்டியிலேயே கியாஸ் சிலிண்டர் வைத்து சமைத்து சாப்பிடுவது வழக்கம். அதன்படி இந்த சுற்றுலா ரெயிலிலும் பயணிகள் ரெயிலுக்குள் சமைத்து சாப்பிட்டு வந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தமிழகம் வந்தடைந்த ரெயில் நேற்று நாகர்கோவிலுக்கு சென்றடைந்தது. அங்கு சுற்றுலா பயணிகள் பத்மநாப சுவாமி கோவில் உள்ளிட்ட சுற்றுலா தலங்களை பார்வையிட்டனர். பின்னர் இரவு ரெயில் மூலம் அவர்கள் மதுரைக்கு புறப்பட்டனர். இன்று அதிகாலை சுற்றுலா ரெயில் மதுரை வந்தடைந்தது.



இணைப்பு ரெயில் வந்தபிறகு ராமேசுவரத்துக்கு சுற்றுலா ரெயில் புறப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்குள் சுற்றுலா பயணிகள் இன்று காலை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு தரிசனம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இன்று காலை சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மதுரை வழியாக ரெயில்கள் வரும் என்பதால் ரெயில் நிலையத்தில் இருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் பெட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதில் இருந்த சில பயணிகள் ரெயிலிலேயே தூங்கினர். மற்றவர்கள் இறங்கி ரெயில் நிலையத்திற்குள் வந்து பிளாட்பாரத்தில் ஓய்வெடுத்தனர். இந்த நிலையில் அதிகாலை 5 மணியளவில் ரெயிலில் இருந்த சிலர் டீ தயாரிக்க அவர்கள் கொண்டு வந்திருந்த சிறிய அளவிலான கியாஸ் அடுப்புகளை பற்ற வைத்ததாக தெரிகிறது. அப்போது கியாஸ் கசிவு ஏற்பட்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இந்த விபத்தில் தீ ரெயில் பெட்டியில் பரவ தொடங்கியது. கரும்புகையால் ரெயிலுக்குள் இருந்தவர்கள் வெளியே வரமுடியாமல் சிக்கினர். இதற்கிடையில் ரெயில் பெட்டியில் தீ மளமளவென பரவ கொழுந்து விட்டு பயங்கரமாக எரிந்தது. மேலும் அருகில் இருந்த பெட்டிக்கும் பரவியது. இதுகுறித்து தகவலறிந்த ரெயில்வே போலீசார் மற்றும் திடீர்நகர், தல்லா குளம் தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அவர்கள் ரெயில் பெட்டியில் பரவிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். 2 தீயணைப்பு வாகனங்கள் வந்த நிலையில் கூடுதலாக வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணி விரைவுப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ரெயில்வே, மாநகர போலீஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணிகளை விரைவு படுத்தினர். மேலும் தீயணைப்பு வீரர்கள் ரெயில் பெட்டியின் அவசர வழியை உடைத்து உள்ளே சென்று சிக்கியிருந்தவர்களை மீட்டனர். இந்த தீ விபத்தில் சிக்கி 9 பேர் உடல் கருகி பலியாகினர். அவர்களது உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ரெயில் பெட்டியில் சிக்கியிருந்தவர்களின் விபரம் உடனடியாகமுழுமையாக தெரியவில்லை. தீ விபத்து நடந்தபோது 20க்கும் மேற்பட்டோர் ரெயில் பெட்டியில் இருந்திருக்கலாம் என தெரிகிறது. இதில் 9 பேர் இறந்த நிலையில் மற்றவர்களின் கதி என்ன? என்று தெரியவில்லை. இந்த தீ விபத்தில் ரெயில் பெட்டி முழுவதும் எரிந்து சேதமானது. மற்றொரு பெட்டி பாதி எரிந்து சேதமானது. தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை கட்டுக்கு கொண்டு வந்தனர். அதன் பின் ரெயில் பெட்டியில் சிக்கியவர்களை காயங்களுடன் மீட்டு ரெயில்வே மற்றும் மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டனர். தீ விபத்து குறித்து தகவலறிந்த மாவட்ட கலெக்டர் சங்கீதா, போலீஸ் கமிஷனர் லோகநாதன், மதுரை ரெயில்வே கோட்ட மேலாளர் அனந்த் பத்மநாபன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு மீட்பு பணிகளை துரிதப்படுத்தி னர். தீ விபத்தில் உத்தரபிர தேசம் லக்கிம்பூர் பகுதியைச் சேர்ந்த சப்தமன்சிங் (வயது 65), மிதிலேஸ்வரி (64) ஆகிய 2 பேரின் உடல்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டு உள்ளது. மற்றவர்களின் விபரம் தெரியவில்லை. இதுதொடர்பாக ரெயில்வே போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நம்ம ஹெல்மெட் என்ற பெயரில் விழிப்புணர்வு: போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் 150 பேருக்கு தலைக்கவசம் வழங்கினார்

சென்னை, ஆக. 27

பயனிப்பவர் தலைகவசம் அணிவது 9.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. போக்குவரத்து காவல், கூடுதல் கமிஷனர்சுதாகர், இணை கமிஷனர் மயில்வாகனன், துணை கமிஷனர் சமய் சிங் மீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். "உங்கள் பாதுகாப்பே எங்கள் முக்கியத்துவம்" என்ற குறிக்கோளுடன், சென்னை போக்குவரத்து போலீசார் செயல்பட்டு வருகிறார்கள். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுகள் பொதுமக்களிடையே ஏற்படுத்தப்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிமீறல்களில், ஹெல்மெட் அணிவதை உறுதி



செய்வதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது, ஏனெனில் இது உயிரைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, கடந்த ஆண்டை விட, இருச்சக்கர வாகன ஓட்டுனர்கள் தலைகவசம் அணிவது 1.9 சதவீதம் அதிகரித்துள்ளது மற்றும் உடன் பயனிப்பவர்தலைகவசம் அணிவது 9.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, "நம்ம ஹெல்மெட்" விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னை போக்குவரத்து போலீசாரால் கடந்த 19ந் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியின் அடுத்த கட்டமாக, 'சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் இன்று காலை, அண்ணாசாலை, ஸ்பென்சர் சந்திப்பில் "நம்ம ஹெல்மெட்" என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். பின்னர் 150 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், உடன் பயணித்தவர்களுக்கு ஹெல்மெட் வழங்கினார். போக்குவரத்து காவல், கூடுதல் கமிஷனர்சுதாகர், இணை கமிஷனர் மயில்வாகனன், துணை கமிஷனர் சமய் சிங் மீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவை கலெக்டர் அலுவலகத்தில் சிறப்பு தொழிற்கடன் முகாம்

கோவை, ஆக. 27

தமிழகம் முழுவதும் 2.77 கோடி மதிப்பில் தொழில் நிறுவனத்துக்கு கடன் வழங்க வேண்டும் என்று பரிந்துரைக்கபட்டுள்ளது. கோயம்புத்தூர் டி.ஐ.ஐ.எஸ் கிளை கோவை மாவட்டத்தில் உள்ள எம்.எஸ்.எம்.இ தேவைகளை பூர்த்தி செய்கிறது.

கோவை, மாவட்ட தொழில்துறைக்குசிறப்பு தொழில் கடன் வழங்கும் நிகழ்ச்சி கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி தலைமை தாங்கினார். இதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, கொடிசியா, கொசிமா போன்ற நிறுவனங்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலெக்டர் கிராந்திகுமார் பாடி பேசி யதாவது: தமிழகம் முழுவதும் 2.77 கோடி மதிப்பில் தொழில் நிறுவனத்துக்கு கடன் வழங்க



வேண்டும் என்று பரிந்துரைக்கபட்டுள்ளது. தொழில் நிறுவனங்களுக்கு வழங்க கூடிய வங்கி கடன் எப்படி விண்ணப்பிப்பது என்றும், அதற்கு உண்டான வழிமுறைகள் என்ன என்பது குறித்து இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மைக்ரோ, எம்.எஸ்.எம்.இ போன்ற தொழிலுக்கு ரூ.10 லட்சம் வரை பெறக்கூடிய நிறுவனங்களுக்கு எந்த விதமான செக்யூரிட்டி பத்திரமும் வாங்ககூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 1949 ம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தமிழ்நாட்டில் உள்ள எம்.எஸ்.எம்.இ தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் முன்னோடி அரசாங்க நிதி நிறுவனமாகும். கோயம்புத்தூர் டி.ஐ.ஐ.எஸ் கிளை கோவை மாவட்டத்தில் உள்ள எம்.எஸ்.எம்.இ தேவைகளை பூர்த்தி செய்கிறது. டிஐஐஎஸ் ஆனது பல்வேறு திட்டங்களின் கீழ் கால கடன்கள், செயல்பாட்டு மூலதனகால கடன்களை வழங்குகிறது. கோவை மாவட்டத்தில் உள்ள எம்.எஸ்.எம்.இ களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஏஐபிசிஎஸ் ஆனது கடந்த 21ந் தேதி முதல் வருகிற 1ந் தேதி வரை சிறப்பு தொழிற்கடன் முகாம் நடத்துகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பல்லடம் பச்சாபாளையம் மாகாளியம்மன் கோவிலில் 108 குத்துவிளக்கு பூஜை

பல்லடம், ஆக. 27

குத்துவிளக்கு பூஜையை பொன்னி மருத்துவமனை இயக்குனர் டாக்டர் பொன்னி சிவக்குமார் துவக்கி வைத்தார். வழிபாடு நிறைவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

பல்லடம் பச்சாபாளையம் மாகாளியம்மன் கோவிலில் 108 குத்துவிளக்கு பூஜை நடைபெற்றது. குத்து விளக்கு பூஜையை முன்னிட்டு பெண்கள் தங்களது மாங்



கல்ய பலம் நீடிக்கவும், தைரியம், வெற்றி, குழந்தை பேறு போன்றவற்றைப் பெறவும், விரதம் இருந்து குத்துவிளக்கு வழிபாட்டில் பங்கேற்றனர்.

குத்துவிளக்கு பூஜையை பொன்னி மருத்துவமனை இயக்குனர் டாக்டர் பொன்னி சிவக்குமார் துவக்கி வைத்தார். நாகராஜ குருக்கள் குத்துவிளக்கு வழிபாட்டைநடத்தி வைத்தார். வழிபாடு நிறைவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. குத்து விளக்கு பூஜையில் கோவில் நிர்வாக கமிட்டியினர், மற்றும் பெண்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

பல்லடம், ஆக. 27

நல்ல சமுதாயத்தை உருவாக்க இன்றைய மாணவர்கள் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். பல்வேறு துறைகள் மூலம் போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பல்லடம் அருகே உள்ள கரடிவாவி, கேத்தனூர், கள்ளிப்பாளையம் உள்ளிட்ட அரசு பள்ளிகளில் ,பல்லடம் துணை போலீஸ் சூப்பிரண்டு சவுமியா மேற்பார்வையில், பள்ளி மாணவர்களுக்கு காமநாயக்கன்பாளையம் போலீசார் போதைப் பொருள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரவி பேசியதாவது: போதைப் பொருட்க



ளுக்கு அடிமையாகாமல் ஒரு எதிர்காலத்துக்கு நல்ல சமுதாயத்தை உருவாக்க இன்றைய மாணவர்கள் எடுத்துக்காட்டாகவிளங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் தடுப்பு குறித்து அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. வரும் காலத்தில் போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு என மாற்ற தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி காவல் துறை உள்ளிட்ட பல்வேறுதுறைகள் மூலம் போதைப்பொருள்தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனை அனைவரும் கடைப்பிடித்து போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு உருவாக்க அனைவரும் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்'' என்றார். இதில் போதைப் தடுப்பு குறித்து சிறப்பாக பேசிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கேத்தனூர் ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா ஹரி கோபால், ரோட்டரி சங்க நிர்வாகிகள் ஆறுமுகம்,கனகராஜ், சுந்தரராஜ், மற்றும்சப் இன்ஸ்பெக்டர்கள் குழந்தைவேல், முருகன், சந்திரமோகன், மற்றும் போலீசார், ஆசிரிய, ஆசிரியைகள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மது போன்ற தீய பழக்கங்களை அறவே தவிர்க்க வேண்டும்: சைதை துரைசாமி அறிவுறுத்தல்

பல்லடம், ஆக. 27

நம்மை உயிர் வாழ வைக்கும் பூமிக்கு, நன்றி சொல்ல வேண்டிய கடமை நமக்கு உள்ளது. உணவுக்குப் பின் 3 மணி நேர இடைவெளி அடுத்த உணவிற்கு கண்டிப்பாக வேண்டும்.

பல்லடத்தில் நடைபெற்ற வான் மழை மாதாந்திர 65 கருத்தரங்கில் மனிதநேய அறக்கட்டளையின் நிறுவனர் சைதை துரைசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உணவே மருந்து, மருந்தே உணவு, என்ற தலைப்பில் பேசினார். அவர்பேசியதாவது: நம்மை உயிர் வாழ வைக்கும் பூமிக்கு, நன்றி சொல்ல வேண்டிய கடமை நமக்கு உள்ளது. தினந்தோறும் ஏராளமான வாகனங்களை இயக்கி பூமியின் சுற்றுச்சூழலை கெடுக்கின்ற நாம் மரங்களை நட்டு பிரயாச்சித்தம் செய்ய வேண்டியது நம் கடமை. அதேபோல பணம், சொத்து சேர்ப்பது மட்டும் முக்கியமல்ல, நல்ல உடல் நலனோடு





இருப்பதும்அதிமுக்கியம். வயது ஆக ஆக உடல் சுருங்க வேண்டும் அது தான் ஆரோக்கியம். உடம்பு விரிந்தால் உங்களுக்கு நோய் இருக்கிறது என்று அர்த்தம்.உடல் சுருங்கினால் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள். நமக்கு முதல் தேவை உடல்நலம், மொழிக்கு இலக்கணம் உள்ளது போல் உடலுக்கும் உள்ளது கிடைத்த போதெல்லாம் சாப்பிடக் கூடாது.உணவு உண்ட பின் அரை மணி நேரம் கழித்து தான் நீர் அருந்த வேண்டும். உணவுக்குப் பின் 3 மணி நேர இடைவெளி அடுத்த உணவிற்கு கண்டிப்பாக வேண்டும். கடவுள் நமக்கு 32 பற்களை கொடுத்திருக்கிறார்.32 முறை நன்கு மென்று உமிழ்நீருடன் உணவை விழுங்கினால் எந்த நோயும் வராது. இன்றைய தலைமுறையினர் துரித உணவுக் கலாச்சாரத்தில் மூழ்கி தங்களது உடம்புகளை கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். மது போன்ற தீய பழக்கங்களை அறவே தவிர்க்க வேண்டும்.இது விவசாய நாடு, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுக்க வேண்டும்.நமது விவசாயிகள் நன்றாக இருந்தால் நாமும் நன்றாக இருப்போம். புடலங்காய் சாற்றை அருந்தினால் நன்றாக தூக்கம் வரும். நான் காய்கறிகளை, கீரைகளை அதிகம் பயன்படுத்தி ஆரோக்கியமாக உள்ளேன். யான் பெற்ற இன்பம் பெருக வையகம் என்ற அடிப்படையில் இதனை கூறுகிறேன். கால்சியம் மாத்திரை வேண்டாம். கீரைகள் போதும், ஹீமோகுளோபின் அதிகரிக்க காய்கறிகள் போதும், நமது விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள் கீரைகளை உண்டு வாழ்வோமானால் உணவே மருந்து, மருந்தே உணவு என்ற தத்துவம் நிலைக்கும், எனவே மனிதன் உணவுப் பழக்கம்,யோகா பயிற்சி, உள்ளிட்ட பழக்கவழக்கங்களை மேற்கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை வாழ வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# நிழலி தென்கரை கற்பக விநாயகர் கோவிலில் மண்டலாபிஷேகம் நிறைவு விழா

காங்கயம், ஆக. 27

விழாவில் பலவகை ஆன்மீக நிகழ்ச்சிகளும் சொற்பொழிவும் நடந்து முடிந்தது. முன்னதாக மழை பெய்ய வேண்டியும், வெயிலின் தாக்கம் குறையவும் விசேஷ வழிபாடு நடைபெற்றது.

காங்கயம் தாலுகா குண்டடம் யூனியன் நிழலி தென்கரையில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. அதைத்தொடர்ந்து 48 நாட்களுக்கான மண்டல பூஜை தொடங்கியது. இதையடுத்து வரன்பாளையம் மடாதிபதி



மவுன சிவாசல அடிகளாரின் ஆலோசனையின் படி உபயதாரரும், ஆன்மீக பிரமுகருமான திருப்பூர் தொட்டம்பட்டி வெங்கிடுசாமியின் தலைமையில் மண்டலாபிஷேக நிறைவு விழா ஆகம விதிப்படி நடைபெற்றது. விழாவில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனை உள்பட பலவகை ஆன்மீக நிகழ்ச்சிகளும் சொற்பொழிவும் நடந்து முடிந்தது. இதில் காங்கயம், கொடுவாய், நிழலி, தாராபுரம், குண்டடம் உள்பட திருப்பூர், ஈரோடு மாவட்டத்தில் இருந்து பக்தர்களும், உபயதாரர்களும் கலந்து கொண்டு விநாயகரை வழிபட்டனர். முடிவில் அனைவருக்கும் பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது. முன்னதாக மழை பெய்ய வேண்டியும், வெயிலின் தாக்கம் குறையவும் விசேஷ வழிபாடு நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை நிழலி ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# பிருந்தாவனம் வீரஆஞ்சநேயர் கோவிலில் வருஷாபிஷேகம்

புதுக்கோட்டை, ஆக. 27

புதுக்கோட்டை இந்து சமய அறநிலையத் துறையைச்சார்ந்தபிருந்தாவனம வடக்கு ராஜ வீதியில் அமை ந்துள்ள ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் கோவிலில் 10ஆம் ஆண்டு வருஷாபிஷேகவிழா சிறப்பு வழிபாடு நடைபெற்றது. கோவிலில் மூலவர் ஸ்ரீவீர ஆஞ்சநேயர் சுவாமிக்கு, பாலபிஷேகம், பன்னீர், தயிர்,

பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் மலர் வட மாலை அலங்காரத்திலும், மஹா தீபராதனை நடைபெற்றது.அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது மாலையில் ஸ்ரீ ஆஞ்சநேயர்சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

நிகழ்வில் திரளான பக்தர்கள் வருகைதந்து ஸ்ரீ வீர ஆஞ்சநேய ர்சுவாமியை வழிபட்டனர்.

இரவு உற்சவர் ஆஞ்சநேயர் அலங்கரிக்கப்பட்ட தேரில் பல்வேறு வீதி வழியாக பவனி வந்தது வருஷாபிஷேக விழா ஏற்பாடுகளை, நிர்வாகிகள் சிறப்புடன் செய்திருந்தனர்.

# குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஏலத்தில் விடப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

பள்ளிப்பட்டு, ஆக. 27

வாகனங்கள் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்து துரு பிடித்து கிடக்கின்றன. காவல் துறை நடவடிக்கை எடுத்து வாகனங்களை பொது ஏலத்தில் விட சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளிப்பட்டு போலீஸ் நிலைய எல்லைக்குள் பலவித குற்றவழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட இருசக்கர வாகனங்களை வைப்பதற்கு இடமில்லாமல்



பள்ளிப்பட்டு தாலுகா அலுவலக வளாகத்தில் குவித்து வைத்துள்ளனர். இவ்வாறு வைத்துள்ள இந்த வாகனங்கள் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்து துரு பிடித்து கிடக்கின்றன.

இவற்றை பொது ஏலத்தில் விட்டால் அரசுக்கு ஓரளவிற்கு வருமானம் கிடைக்கும் என்றும் இந்த வாகனங்களும் நல்ல முறையில் இருக்கும் போது பொதுமக்கள் உபயோகப்படுத்த முடியும் என்றும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். எனவே திருவள்ளூர் மாவட்ட காவல் துறை நடவடிக்கை எடுத்து வாகனங்களை பொது ஏலத்தில் விட சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏரி, குளம் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஆக. 27

மழைக்காலங்களில் தண்ணீர்கசிந்து நெல், ராகி உள்ளிட்ட மூட்டைகள் நனைந்து வீணாகிறது. பொதுப்பணித்துறை சொந்தமான இடத்தை அளவீடு செய்து, ஆக்கிரமிப்புகள் அகற்றிட வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சரயு தலைமையில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: பேட்டபனூர் கால்நடை மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளதால், கால்நடைகளுக்கு சிகிச்சையளிப்பதால் தாமதம் ஏற்படுகிறது. எனவே, கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும். வேப்பனப்பள்ளியில் உள்ள வேளாண்மை அலுவலகம் கட்டிடம் சேதமாகி உள்ளதால், மழைக்காலங்களில் தண்






ணீர்கசிந்து நெல், ராகி உள்ளிட்ட மூட்டைகள் நனைந்து வீணாகிறது. எனவே, வேளாண்மை அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டி தர வேண்டும். பாரூர் ஏரியின் கீழ் பொதுப்பணித்துறை சொந்தமான இடங்களை தனியார் சிலர் ஆக்கிரமித்து அவ்வழியே பொது மக்கள் சென்று வர இடையுறு ஏற்படுத்தி வருகின்றனர். எனவே, பொதுப்பணித்துறை சொந்தமான இடத்தை அளவீடு செய்து, ஆக்கிரமிப்புகள் அகற்றிட வேண்டும். மாவட்டத்தில் உள்ள ஏரிகள், குளம், குட்டைகள் அளவீடு செய்து ஆக்கிரமிப்புகள் அகற்றி, தூர்வார வேண்டும். மேலும் நீர்நிலைகள், நீர்வழித்தடங்களின் ஆக்கிரமிப்புகள் அகற்றிட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் காய்கறிகள் சாகுபடியில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரே நேரத்தில் அதிகளவில் காய்கறிகள் விளைவிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வும், பயிற்சியும் அளிக்க வேண்டும். போச்சம்பள்ளி வாரச்சந்தையில் கூடுதல் சுங்க கட்டணம் வசூலிப்பதை தடுக்க தகவல் பலகை வைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள். தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து கலெக்டர் சரயு பேசியதாவது: இநாம் திட்டத்தின் கீழ் வேளாண் விற்பனை கூடங்களில் மாங்காய்கள் விற்பனை செய்யலாம். நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகள் அகற்றிட தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காய்கறிகள் சாகுபடி தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். போச்சம்பள்ளி வாரச்சந்தையில் கட்டண விவரங்களுடன் தகவல் பலகை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி விரைவில் அடுத்த போராட்டம்: அமைச்சர் பேச்சு

தஞ்சாவூர், ஆக. 27

பா.ஜ.க ஆட்சிக்கு வந்த 9 ஆண்டுகளில் பயன் பெற்றது அதானி, அம்பானி குடும்பம் தான். நீட் தேர்வால் 21 மாணவர்களை இழந்துள்ளோம்.

தஞ்சைவடக்கு, தெற்கு, மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எம்.பி.க்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம். கல்யாண சுந்தரம், ராமலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் இளையராஜா, மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் அண்ணாதுரை எம்.எல்.ஏ, மாநகர செயலாளரும் மேயருமான சண்.ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் முகில்வேந்தன் வரவேற்றார். இந்த கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: மத்திய பா.ஜ.க. அரசு இன்று நாட்டை சீரழித்துக்கொண்டு இருக்கிறது. இதற்கு உதாரணம் தான் மணிப்பூர் மாநிலம். 4 மாதங்களுக்கு மேலாக



ஒரு மாநிலம் பற்றி எரிந்துக்கொண்டு இருக்கிறது. 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலவரத்தில் இறந்துள்ளனர். தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். ஆனால், பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வரவே பயப்படுகிறார். அதையும் மீறி வந்த பிரதமர் மோடி இரண்டு மணி நேரம் பேசுகிறார். இதில் சுமார் 1½ மணி தி.மு.க., வையும், தலைவர் ஸ்டாலினையும் திட்டி பேசி விட்டு, வெறும் 5 நிமிடம் மட்டுமே தான் மணிப்பூர் பற்றி பேசி விட்டு சென்றார். பா.ஜ.க ஆட்சிக்கு வந்த 9 ஆண்டு காலத்தில் பயன் பெற்றது அதானி, அம்பானி குடும்பம் தான். சாலை, மின்சாரம், விமான நிலையம், ரெயில்வே ஆகியவற்றை அதானி கையில் பிரதமர் மோடி தூக்கிக்கொடுத்து விட்டார். இதை தான் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் சொல்ல முடியாமல், குறுக்கு வழியில் அவரது பதவியை பறித்தனர். நீட் தேர்வால் 21 மாணவர்களை இழந்துள்ளோம். நீட் தேர்வை ரத்து செய்ய முழு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். நீட் தேர்வுக்கு எதிராக அ.தி.மு.க.தான் போராட்டம் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அந்தப் போராட்டத்தையும் தி.மு.க.தான் நடத்தியது. தலைவரிடம் அனுமதி பெற்று விரைவில் அடுத்த போராட்டம் நடத்தப்படும்.

நீட் தேர்வு ரத்தாகும் வரை தி.மு.க. இளைஞரணியின் போராட்டம் ஓயாது. தி.மு.க. நடத்திய போராட்டத்துக்கு அ.தி.மு.க.வுக்கும் அழைப்பு விடுத்தோம். அதே நாளில் மதுரையில் அ.தி.மு.க மாநாடு நடைபெற்றது. நீட் தேர்வு ரத்து உத்தரவாதத்தைக் கொடுத்தால் தான் பா.ஜ.க.வுடன் கூட்டணி என்கிற ஒரு தீர்மானத்தை அ.தி.மு.க.வால் போட முடியவில்லை. தமிழ்நாட்டில் கடந்த 2021ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க.வை விரட்டினோம். 2024ம் ஆண்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வையும் விரட்டுவோம். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக சேலத்தில் தி.மு.க இளைஞரணி மாநாடு நடைபெற உள்ளதை முன்னிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் தஞ்சை வடக்கு, தெற்கு, மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாநாட்டு நிதியாக ரூ.30 லட்சம் வழங்கப்பட்டது. இதேபோல் தஞ்சை மாநகர தி.மு.க சார்பில் மாநாட்டு நிதியாக ரூ.5 லட்சமும், இளைஞர் அணி சார்பில் ரூ.4 லட்சமும் வழங்கப்பட்டது. இந்த விழாவில் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சை வடக்கு ஒன்றிய செயலாளர் முரசொலி, மத்திய மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராணி கண்ணன், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கார்ல் மார்க்ஸ், பகுதி செயலாளர்கள் மேத்தா, கார்த்திகேயன், சதாசிவம், நீலகண்டன், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆதிராஜேஷ், மாநகர அமைப்பாளர் வாசிம் ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் ராஜா நன்றி கூறினார்.

# நீர்வரத்து 8 ஆயிரம் கனஅடியாக சரிவு 10 நாட்களுக்கு பிறகு ஒகேனக்கல்லில் பரிசல் இயக்க அனுமதி

தருமபுரி, ஆக. 27

10 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக சரிந்தது. சுற்றுலா பயணிகள் 10 நாட்களுக்கு பிறகு பரிசலில் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

கர்நாடகா அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரின் அளவு அதிகரித்ததால் காவிரி ஆற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து கடந்த சில நாட்களாக தொடர்ந்து 10 ஆயிரம் கனஅடியாகவே இருந்தது. தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை அளவு குறைந்ததால், கர்நாடகா அணைகளில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு குறைந்தது. இதனால் ஒகேனக்கல்லில் நேற்று 10 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக சரிந்தது. கடந்த சில நாட்களாக ஒகேனக்கல்லில் நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடியாக வந்து கொண்டிருந்ததால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி தொடர்ந்து 10வது நாளாக பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்து இருந்தது. இந்த நிலையில் இன்று காலை நீர்வரத்து 8 ஆயிரம் கனஅடியாக சரிந்ததால், ஒகேனக்கல்லில் இன்று முதல் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்தது. இதைத்தொடர்ந்து ஒகேனக்கல்லுக்கு இன்று சுற்றுலாவுக்கு வந்த சுற்றுலா பயணிகள் 10 நாட்களுக்கு பிறகு பரிசலில் சவாரி செய்து மகிழ்ந்தனர்.



# திண்டுக்கல்லில் டி.பி.கே.என். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா

திண்டுக்கல், ஆக. 27

சிறப்பு விருந்தினராக இஸ்ரோ முன்னாள் முதன்மை மேலாளரும், மூத்த விஞ்ஞானியுமான சிவ சுப்ரமணியன் கலந்து கொண்டார். மேலும் பள்ளியில் 12ம் வகுப்பு தேர்வில் 4 பாடங்களில் சதம் அடித்த மாணவி சரண்யா ஸ்ரீ என்பவருக்கு விருது வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

திண்டுக்கல் மதுரை ரோடு யானைத்தெப்பம் பகுதியில் டி.பி.கே.என். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி உள்ளது. பள்ளியின் 33வது ஆண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தலைவர் ராஜப்பன் தலைமை தாங்கினார். செயலாளர் வளசுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார். நாட்டாமை ராக்கி, நாட்டாமை பொன்னுலிங்க நாடார் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக இஸ்ரோ முன்னாள் முதன்மை மேலாளரும், மூத்த விஞ்ஞானியுமான சிவ சுப்ரமணியன் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில், விஞ்ஞானத்தில் இந்தியா அதிக வளர்ச்சி அடைந்து வருகிறது. நிலவின் தென் துருவத்தில் சந்திரயான் 3 தரையிறங்கி சாதனை படைத்துள்ளது. உலகமே இந்தியாவை திரும்பி பார்க்க வைத்துள்ளது. மாணவர்கள் அறிவியல் கற்க ஆர்வம் காட்ட வேண்டும். குழந்தைகளுக்கு பெற்றோர் விஞ்ஞானம் சார்ந்த அறிவுரை வளர்க்க ஊக்கம் அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் பள்ளியில் 12ம் வகுப்பு தேர்வில் 4 பாடங்களில் சதம் அடித்த மாணவி சரண்யா ஸ்ரீ என்பவருக்கு விருது வழங்கி பாராட்டு தெரிவித்தார். தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொருளாளர் ராஜேஷ் கண்ணன், பள்ளி முதல்வர் ரத்னகலா மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# வாலாஜாபாத் ஒன்றியத்தில் எம்.பி. நிதியில் கட்டப்பட்ட கட்டிடங்கள் திறப்பு

வாலாஜாபாத், ஆக. 27

ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டிடமும் கட்ட காஞ்சிபுரம் தொகுதி எம்.பி. க.செல்வம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்தார். சி.வி.எம்.பி. எழிலரசன் கலந்து கொண்டு, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பரந்தூர் ஊராட்சியில் ரூ.10 லட்சம் செலவில் பஸ் பயணிகள் நிழற்கூடமும்,



சிங்காடிவாக்கம் ஊராட்சியில் ரூ.10 லட்சம் செலவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் விழா மேடையும், அத்திவாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சிறுவேடல் கிராமத்தில் ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டிடமும் கட்ட காஞ்சிபுரம் தொகுதி எம்.பி. க.செல்வம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்தார். அதன்படி கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களில் திறப்பு விழா நேற்று நடைபெற்றது க.செல்வம் எம்.பி. தலைமையில் நடைபெற்ற விழாவில் உத்திரமேரூர் தொகுதி எம்.எல்.ஏ. க.சுந்தர், காஞ்சிபுரம் தொகுதி எம்.எல்.ஏ. சி.வி.எம்.பி. எழிலரசன் கலந்து கொண்டு, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். விழாவில் வாலாஜாபாத் ஒன்றிய குழு தலைவர் ஆர்.கே தேவேந்திரன், ஒன்றிய செயலாளர் படுநெல்லி பி.எம். பாபு, மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் ராஜலட்சுமி குஜராஜ், ஒன்றிய கவுன்சிலர் லோகுதாஸ், ஊராட்சி மன்ற தலைவர்கள் அத்திவாக்கம் குமார், சிங்காடி வாக்கம் சுரேஷ், ஒன்றிய அவைத்தலைவர் பழனி, ஒன்றிய துணை செயலாளர்கள் வெங்கட்ராமன், கவிதா டில்லி பாபு, ஒன்றிய பொருளாளர் வேளியூர் சங்கர், மாவட்ட பிரதிநிதிகள் ஆறுமுகம், தண்டலம் பார்த்திபன், திருஞானசம்பந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலையில் பவுர்ணமி முன்னிட்டு சிறப்பு பஸ்கள் இயக்கம்

வேங்கிக்கால், ஆக. 27

கிரிவல பக்தர்களின் வசதிக்காக ஏற்பாடு சென்னைக்கு 5 சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது

திருவண்ணாமலையில் பவுர்ணமி முன்னிட்டு கிரிவல பக்தர்களின் வசதிக்காக வருகிற 30ந் தேதி (புதன்கிழமை) சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு 250 சிறப்பு பஸ்கள், பெங்களூரில் இருந்து 50 சிறப்பு பஸ்கள்,

வேலூர் மற்றும் ஆரணியில் இருந்து 50 சிறப்பு பஸ்கள் என மொத்தம் 350 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. வார இறுதி நாட்களில் திருவண்ணாமலையில் இருந்து சென்னைக்கு 20 சிறப்பு பஸ்கள், போளூரில் இருந்து சென்னைக்கு 5 சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது. நாளை திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரியில் நடைபெற உள்ள தனியார் வேலைவாய்ப்பு முகாமிற்கு செல்ல திருவண்ணாமலை பஸ் நிலையத்தில் இருந்து அருணை பொறியியல் கல்லூரிக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மண்டல பொது மேலாளர் செந்தில் தெரிவித்துள்ளனர்.



# தேவிபட்டணம் ஊராட்சியில் சிறப்பு மருத்துவ முகாம்

சிவகிரி, ஆக. 27

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின் கீழ் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தேவிபட்டணம் ஊராட்சி ஆரம்பப்பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை சதன் திருமலைக்குமார் எம்.எல்.ஏ., வாசு யூனியன் சேர்மனும், வாசு வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான பொன்



முத்தையா பாண்டியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிவகிரி பேரூராட்சி தலைவர் கோமதி சங்கரி சுந்தரவடிவேலு, மாவட்ட துணைச்செயலாளர் மனோகரன், தேவிபட்டணம் ஊராட்சி மன்ற தலைவர் வக்கீல் ராமராஜ், துணைத்தலைவர் மாடக்கண்ணு, சிவகிரி பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், தேவிபட்டணம் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், கிளைச்செயலாளர் முருகன், தென்மலை ஒன்றிய கவுன்சிலர் முனியராஜ், உள்ளார் விக்கி, தலைமை மருத்துவர்கள் திருமலை, மயில்வாகணன், அப்துல் காதர், மாரிமுத்து, செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ராகவா லாரன்ஸ் அறக்கட்டளைக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடை கொடுத்த லைகா சுபாஷ்கரன்

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை புறநகரில் அமைந்திருக்கும் தனியார் பொறியியல் கல்லூரியில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பட குழுவினருடன் தயாரிப்பாளர் லைகா சுபாஷ்கரன், பிரேமா சுபாஷ்கரன், சுபாஷ்கரனின் தாயார் ஞானாம்பிகை ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் ராகவா லாரன்ஸ் பேசியதாவது, என்னுடைய மாணவர்களை அனைத்து மேடைகளிலும் நடனமாட வைக்க வேண்டும் என விரும்புகிறேன். ஆனால் ஒரு சில நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் என்னிடம் உங்களுடைய மாணவர்கள் தொடர்ச்சியாக மேடை ஏறி நடனமாடும் வாய்ப்பை அளித்தாலும், ஒரே மாதிரியான நடனங்களைத் தானே ஆடுகிறார்கள் . இது பார்வையாளர்களுக்கு போரடிக்காதா? என கேட்பார்கள். அவர்களிடத்தில் திரிஷா, நயன்தாரா நடனம் ஆடினாலும், அவர்களும் ஒரே நடனத்தை தானே ஆடுகிறார்கள். அதை மட்டும் திரும்பத் திரும்ப பார்க்கிறீர்களே அதனால் இதையும் திரும்பத் திரும்ப பார்க்கலாமே எனச் சொல்வேன். நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு மேடை ஏறும் வாய்ப்பை வழங்குவதால் அவர்களுடைய குடும்பத்திற்கு வாழ்வாதாரம் கிடைக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு இந்த நடனத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. இவர்களுடைய நடனத்தில் கவர்ச்சி இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு வலி இருக்கிறது. இவர்களுடைய ஆட்டத்தில் அழகு இருக்கிறதோ இல்லையோ. கடவுள் இருக்கிறார். இதனால் இந்த குழுவினருக்கு வாய்ப்பளியுங்கள். என்னுடைய மாணவர்களின் நிகழ்ச்சியை பார்த்த பிறகு சிலர் உதவி செய்வார்கள்.

ஆனால் நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அதுவும் ஒரு கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கிய சுபாஷ்கரனுக்கு நன்றி. என்னுடைய அறக்கட்டளைக்கு யாரும் நிதி உதவி வழங்க வேண்டாம் என்று ஓராண்டிற்கு முன்னர் அதிகாரப்பூர்வமாக அறிவித்தேன். ஏனெனில் நான் தற்போது நன்றாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு கிடைக்கும் வருவாயில் அறக்கட்டளைக்கு தேவையான நலத்திட்ட பணிகளை செய்து கொண்டிருக்கிறேன். வேண்டாம் என்று சொல்லும் போது கடவுள் கொடுப்பார் என்று சொல்வார்கள். அது போல் தற்போது சுபாஷ்கரன் ஒரு கோடி ரூபாய் நன்கொடை வழங்கி இருக்கிறார். அவருடைய மனம் பெரியது. இதன் மூலம் நிறைய பேரின் பசி தீர்க்கப்படும். இந்த மாணவர்கள் தங்குவதற்கும், நடன பயிற்சி மேற்கொள்வதற்கும் கட்டிடம் ஒன்றை கட்ட வேண்டும் என்று விரும்பினார்கள். நீங்கள் வழங்கும் அந்த நன்கொடையில் இந்த மாணவர்களுக்காக ஒரு இடத்தை வாங்கி, அவர்களுக்கான கட்டிடம் ஒன்றை கட்டி, அதற்கு உங்களின் தாயாரின் பெயரை சூட்டுவோம். இவை அனைத்தும் இன்னும் ஒரு வருடத்தில் நிறைவேறும் என உறுதியளிக்கிறேன். சந்திரமுகியாக கங்கனா நடிக்கப் போகிறார் என வாசு சார் சொன்னவுடன், அவர் மிகவும் துணிச்சல் மிக்கவர். சமூக வலைதளங்களில் தீவிரமாக தனது கருத்தை பதிவு செய்பவர். வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னேறியவர் என்பதால் எப்படி நடந்து கொள்வாரோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். படப்பிடிப்பு தளத்தில் முதல் நாள் வருகை தரும் போது அவருடன் துப்பாக்கி ஏந்திய காவலர்களும் வந்தனர். அவர் ஒரு கலைஞர்தானே எதற்கு அவருடன் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் வரவேண்டும்? என எண்ணினேன். இது தொடர்பாக வாசுசாரிடம் கேட்டபோது. 'அவர் இப்படித்தான். அவருக்கு சில பாதுகாப்பு காரணங்களுக்காக ஆயுதம் எழுதிய காவலர்கள் உடன் வருவார்கள்' என விளக்கம் சொன்னார். அப்போது அவரைப் பார்த்து வணக்கம் சொல்வதற்கு கூட பயமாக இருந்தது. அதன் பிறகு அவரிடம் என் எண்ணத்தை பகிர்ந்து கொண்டேன். அவர் உடனடியாக ஆயுதம் ஏந்திய காவலர்களிடம் பேசி அவர்களை சற்று தொலைவில் நிற்க வைத்தார். அதன் பிறகு கங்கனாவிடம் பழகத் தொடங்கி, கங்கனா என்றேன். அதன் பிறகு கங்கு என்றேன். படப்பிடிப்பு தளத்தில் அவரும் கலாட்டா செய்வார். மகிழ்ச்சியாக இருப்பார். உற்சாகத்துடன் இருப்பார். நான் பழகியதில் குழந்தை உள்ளம் கொண்ட நடிகை என கங்கனாவை சொல்லலாம் அவர் இந்த படத்தில் நடித்திருப்பது படத்திற்கு பலம். " என்று பேசினார். இந்த நிகழ்ச்சியின் போது ராகவா லாரன்ஸின் அறக்கட்டளைக்காக லைகா தயாரிப்பாளர் சுபாஸ்கரன் ஒரு கோடி ரூபாய் நன்கொடை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியலில் களமிறங்கிய 'நாட்டு நாட்டு' பாடகர்



'ஆர்.ஆர்.ஆர்' படத்தின் 'நாட்டு நாட்டு' பாடலுக்கு ஆஸ்கர் விருது கிடைத்தது. ஜூனியர் என்.டி.ஆரும் ராம் சரணும் போட்டி போட்டு ஆடும் இந்த பாடல் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர். நடிப்பில் ராஜமவுலி இயக்கத்தில் வெளியான படம் 'ஆர்ஆர்ஆர்'. தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் வெளியான இப்படம் நல்ல விமர்சனங்கள் பெற்று வசூல் சாதனையும் நிகழ்த்தியது. இப்படத்தில் இடம் பெற்றுள்ள 'நாட்டு நாட்டு' பாடல் சிறந்த பாடலுக்கான ஆஸ்கர் விருதை வென்றது. ஜூனியர் என்.டி.ஆரும் ராம் சரணும் போட்டி போட்டு ஆடும் இந்த பாடல் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இந்நிலையில், 'நாட்டுநாட்டு' பாடல்பாடிய பாடகர்ராகுல்சிப்லிகஞ்ச், தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் சார்ப்பில் போட்டியிட விண்ணப்பம் செய்துள்ளதாகவும் கோஷமஹால் தொகுதியில் அவர் களமிறக்கப்படுவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# இளையராஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற தேவிஸ்ரீ பிரசாத்.. எதற்கு தெரியுமா?



69வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நடைபெறவுள்ளது. 'புஷ்பா' திரைப்படத்திற்காக இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத்திற்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 69வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் 2021ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதையடுத்து தேசிய விருது பெறும் படங்களின் பட்டியல் சமீபத்தில் வெளியானது. இதில் தமிழ் சினிமாவிற்கு 5 விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து 'புஷ்பா' திரைப்படத்திற்காக இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத்திற்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத், இளையராஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றுள்ளார். இது தொடர்பான வீடியோ தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், "தேசிய விருது பட்டியலில் இடம்பிடித்ததைத் தொடர்ந்து இளையராஜா சாரிடம் சென்று ஆசிபெற்றேன். நீங்கள் கொடுத்த அனைத்து உத்வேகத்திற்கும் நன்றி இளையராஜாசார். அதுவே என்னை தேசிய விருதிற்கு அழைத்து சென்றது" என்று பதிவிட்டுள்ளார்.

# லெஜண்ட் பெற்ற மகனுடன் செல்ஃபி வைரலாகும் செஸ் புகைப்பட கலைஞரின் நெகிழ்ச்சி பதிவு



சென்னையை சேர்ந்த 18 வயதான பிரக்ஞானந்தா தற்போது 12ம் வகுப்பு படித்து வருகிறார். செஸ் புகைப்பட கலைஞர் மரியா பிரக்ஞானந்தாவின் தாயாருக்கு சமூக வலைதள பக்கத்தில்புகழாரம்சூட்டியுள்ளார்.

அஜர்பைஜான் தலைநகர் பாகு நகரில் நடந்த உலகக் கோப்பை செஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பிரக்ஞா னந்தா, 'நம்பர் ஒன்' வீரர் மாக்னஸ் கார்ல்செனிடம் (நார்வே) தோல்வியை தழுவினார். இதன் டைபிரேக்கரில் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்ற கார்ல்சென் அடுத்த ஆட்டத்தில் 'டிரா' செய்து உலக் கோப்பையில் மகுடம் சூடினார். தோல்வி அடைந்தாலும் சர்வதேச செஸ் அரங்கில் ஜாம்பவனாக திகழும் கார்ல் செனுக்கு எதிராக பிரக்ஞானந்தா தைரியமாக போராடிய விதம் ரசிகர்களின் இதயங்களை தொட்டது. பாராட்டுகளும் குவிந்தன. விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு இந்த போட்டியில் இறுதி சுற்றை எட்டிய முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்ற பிரக்ஞானந்தாவுக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. சென்னையை சேர்ந்த 18 வயதான பிரக்ஞானந்தா தற்போது 12ம் வகுப்பு படித்து வருகிறார். அவருடன் அவரது தாயார் நாகலட்சுமியும் உடன் சென்றுள்ளார். தந்தை மாற்றுத்திறனாளி என்பதால் பிரக்ஞானந்தாவை போட்டி நடக்கும் எல்லா இடங்களுக்கும் அழைத்து செல்வது அவரது தாயார் தான். அவர் இந்த நிலைக்கு உயர்ந்திருப்பதற்கு நாகலட்சுமியின் பங்களிப்பு அளப்பரியது. இந்நிலையில் செஸ் புகைப்பட கலைஞர் மரியா பிரக்ஞானந்தாவின் தாயாருக்கு சமூக வலைதள பக்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளார். அந்த பதிவில் லெஜண்ட் மற்றும் அவரது மகனுடன் செல்பி எடுத்துக் கொண்டேன் என பதிவிட்டுள்ளார். செஸ் விளையாடிய பிரக்ஞானந்தாவை அனைவரும் பாராட்டி வரும் நிலையில் அவரது அம்மாவுக்கு புகழாரம் சூட்டியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சிஎஸ்கே 5வது முறையாக சாம்பியன்: ஜிம் நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடிய டோனி

கடந்த 2008ம் ஆண்டு முதல் ஐபிஎல் கிரிக்கெட் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் 8 அணிகள் மட்டுமே விளையாடிய நிலையில் ஒவ்வொரு ஆண்டும் பல மாறுதல்கள் நடந்து தற்போது 10 அணிகள் ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வருகின்றன. 2022ம் ஆண்டு முதன் முறையாக குஜராத அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. இதனை தொடர்ந்து இந்த ஆண்டு நடந்த ஐபிஎல் 16வது சீசன் இந்த ஆண்டு நடைபெற்றது. இதன் இறுதி போட்டியில் குஜராத் அணியும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின. இந்த பரபரப்பான ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கடைசி பந்தில் வெற்றியை ருசித்தது. இதன்மூலம் சிஎஸ்கே அணி 5வது முறையாக கோப்பையை வென்றது. இதனை சிஎஸ்கே வீரர்கள் டோனிக்கு அர்ப்பணிப்பதாக தெரிவித்தனர். இந்த போட்டி முடிந்த பிறகு டோனி குறித்து சில சுவாரஸ்மான வீடியோக்கள் அவ்வபோது வைரலாகி வந்தது. இந்நிலையில் 5வது முறையாக ஐபிஎல் கோப்பை வென்றதை கொண்டாடும் வகையில், ராஞ்சியில் உள்ள JSCA ஜிம்மில், தனது நண்பர்களுடன் சேர்ந்து கேக் வெட்டி கொண்டாடினர். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# முத்தம் கொடுத்த விவகாரம்: பதவி விலகும் வரை விளையாட மாட்டோம் ஸ்பெயின் மகளிர் அணி அறிவிப்பு



மகளிர் உலக கால்பந்து போட்டி சமீபத்தில் ஆஸ்திரேலியா நியூசிலாந்தில் நடந்தது. இதில் ஸ்பெயின் முதல் முறையாக சாம்பியன் வென்றது. அந்த அணி இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியது. மைதானத்தில் வெற்றி கொண்டாட்டத்தின் போது ஸ்பெயின் வீராங்கனைகளை அந்நாட்டு கால்பந்து சம்மேளன தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் கட்டியணைத்து முத்தமிட்டு வாழ்த்து தெரிவித்தார். இந்த வீடியோ சமூக வலைதளதங்களில் வைரலானது. லூயிஸ் ரூபியேல்சின் இந்த செயலுக்கு கண்டனங்கள் குவிந்தன. இதையடுத்து அவர் மன்னிப்பு கேட்டார். அவர் கூறும்போது, நான் கண்டிப்பாக தவறு செய்து விட்டேன். இதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றார். இந்த சம்பவம் தொடர்பாக சர்வதேச கால்பந்து சம்மேளன (பிபா) ஒழுங்கு நடவடிக்கையை தொடங்கியதை அடுத்து அவர் பதவி விலகியதாக செய்திகள் வந்தன. இதனையடுத்து அந்த செய்தி பொய் எனவும் ராஜினாமா செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் கால்பந்து சம்மேளன தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் பதவி விலகும் வரை விளையாட மாட்டோம் என மகளிர் அணி தெரிவித்துள்ளது.

# ஆசிய விளையாட்டு போட்டி: இந்திய அணியில் 634 வீரர், வீராங்கனைகள் பங்கேற்பு



1951ம் ஆண்டு முதல் ஆசிய விளையாட்டு போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. 19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவில் உள்ள ஹாங்சோவ் நகரில் அடுத்த மாதம் (செப்டம்பர்) 23ந் தேதி முதல் அக்டோபர் 8ந் தேதி வரை நடக்கிறது. இதில் 48 விளையாட்டுகளில் இருந்து மொத்தம் 481 பந்தயங்கள் அரங்கேறுகிறது. இந்த போட்டியில் பங்கேற்க மொத்தம் 850 வீரர், வீராங்கனைகள் அடங்கிய பட்டியலை இந்திய ஒலிம்பிக் சங்கம், மத்திய விளையாட்டு அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்து இருந்தது. இந்த பட்டியலில் இருந்து 38 விளையாட்டுகளை சேர்ந்த 634 வீரர், வீராங்கனைகள் கொண்ட இந்திய அணி ஆசிய போட்டியில் கலந்து கொள்ள மத்திய விளையாட்டு அமைச்சகம் நேற்று அனுமதி அளித்தது. ஆசிய விளையாட்டு போட்டிக்கு இந்தியா அனுப்பும் 'மெகா' எண்ணிக்கை கொண்ட அணி இதுதான். இதற்கு முன்பு 2018ம் ஆண்டு ஜகர்த்தாவில் நடந்த ஆசிய விளையாட்டில் அதிகபட்சமாக 572 பேர் கொண்ட இந்திய அணி கலந்து கொண்டு 16 தங்கம் உள்பட 70 பதக்கங்களை வென்று 8வது இடத்தை பிடித்து இருந்தது. ஆசிய விளையாட்டு போட்டிக்கான இந்திய அணியில் தடகளத்தில் அதிகபட்சமாக 65 பேர் இடம் பெற்றுள்ளனர். இதில் 34 வீரர்கள், 31 வீராங்கனைகள் அடங்குவர்.

இதற்கு அடுத்தபடியாக கால்பந்து அணியில் 44 வீரர், வீராங்கனைகளும், ஹாக்கி அணியில் 36 வீரர், வீராங்கனைகளும், கிரிக்கெட் அணியில் 30 பேரும், துப்பாக்கி சுடுதல் அணியில் 30 பேரும், பாய்மரப்படகு அணியில் 33 பேரும் அங்கம் வகிக்கின்றனர். பளுதூக்குதல், ஜிம்னாஸ்டிக்ஸ், ஹேண்ட்பால், ரக்பி ஆகிய விளையாட்டுகளில் வீரர்கள் யாருக்கும் அனுமதி கிடைக்கவில்லை. ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற மல்யுத்த வீரர் பஜ்ரங் பூனியா (65 கிலோ) தகுதி சுற்று போட்டியில் கலந்து கொள்ளாவிட்டாலும், அவரது பெயரை மல்யுத்த சங்கத்தை நிர்வகிக்கும் ஒலிம்பிக் கமிட்டி பரிந்துரை செய்ததால் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்திய அணியில் இடம் பெற்று இருப்பவர்களில் நீரஜ் சோப்ரா, ஜோதி யர்ராஜி (தடகளம்), பிரனாய், லக்ஷயா சென், பி.வி.சிந்து (பேட்மிண்டன்), ஷிவதபா, நிகாத் ஜரீன் (குத்துச்சண்டை), பவானி தேவி (வாள்வீச்சு), பிரித்விராஜ் தொண்டைமான், மானு பாகெர் (துப்பாக்கி சுடுதல்), சரத்கமல், சத்யன், மணிகா பத்ரா (டேபிள் டென்னிஸ்), மீராபாய் சானு (பளுதூக்குதல்), டி.குகேஷ், பிரக்ஞானந்தா, வைஷாலி (செஸ்), சவுரவ் கோஷல், ஜோஸ்னா சின்னப்பா, தீபிகா பலிக்கல் (ஸ்குவாஷ்), ரோகன் போபண்ணா, ராம்குமார் (டென்னிஸ்) உள்ளிட்டோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.